# කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව

# නීති පීඨය

# නීතිවේදී උපාධි පරීක්ෂණය, ප්‍රථම වසර (මාර්ගගත) - 2020

# නීති විධික්‍රම

(පැ තුනයි)

මුළු ප්‍රශ්න සංඛ්‍යාව: 06

ඕනෑම ප්‍රශ්න <u>තුනකට</u> **පමණක්** පිළිතුරු සපයන්න.

(නොපැහැදිලි අත්අකුරු සඳහා ලකුණු අඩු කෙරේ.)

---

1. බොහෝ නීති විද්‍යාර්ථීන් නීතිය, සමාජය වෙනස් කිරීමට ඉලක්ක කළ මෙවලමක්ය යන ප්‍රස්තුතය සමඟ එකඟ වන අතර, 'නීතිය' පිළිබඳව පවතින නිර්වචන සම්බන්ධයෙන් එකඟ නොවේ. ඕනෑම නීති ගුරුකුල දෙකක් ඇසුරින් සාකච්ඡා කරන්න. ඔබගේ පිළිතුර ප්‍රායෝගික නිදර්ශන අනුසාරයෙන් සාරවත් කරන්න.

2. එදිරිවාදී පද්ධතියට පක්ෂ අය විශ්වාස කරන්නේ පැමිණිලිකරුවන් සහ විත්තිකරුවන් අතර තරඟය සත්‍ය සොයා ගැනීමට ඇති හොඳම ක්‍රමය බවයි. කෙසේ නමුත්, විවේචකයන් කියා සිටින්නේ, විනිශ්චයකාරවරයාට නඩුව ඔප්පු කිරීමට තරඟයක යෙදීමෙන්, පාර්ශවයන් ජයග්‍රහණය කෙරෙහි මිස සත්‍ය අනාවරණයට උනන්දු නොකරවන බවයි.

   උක්ත ප්‍රකාශය අනුව, එදිරිවාදී යුක්තිය පසිඳලීමේ පද්ධතියේ ශක්තීන් සහ දුර්වලතා විමර්ශනවාදී පද්ධතියේ ශක්තීන් සහ දුර්වලතා සමඟ සසඳන්න.

3. 2007 අංක 56 දරණ සිවිල් හා දේශපාලන අයිතිවාසිකම් පිළිබඳ ජාත්‍යන්තර සම්මුතිය පිළිබඳ පනතේ (ICCPR පනත) 3 (1) වගන්තිය පහත පරිදි දක්වයි:

*කිසිම තැනැත්තෙකු විසින්, යුද්ධය පැතිරවීම හෝ වෙනස් ලෙස සැලකීමට, එදිරිවාදිකම්වලට හෝ ප්‍රචණ්ඩ ක්‍රියාවලට යොමු කිරීම සංයුක්ත වන ජාතික, වාර්ගික හෝ ආගමික වෛරය සඳහා පෙළඹවීම්, නොකළ යුතුය.*

බහුවාර්ගික රටක් වන සින්දර් රාජ්‍යයේ ප්‍රමුඛ රාජ්‍ය පුවත්පතක ප්‍රධාන සංස්කාරක ඇන්ඩ්‍රෑ වේ. විවිධ සංස්කෘතීන් සහ විශ්වාසයන් පිළිබඳ මහජනතාවට අවබෝධය ලබාදීම පිණිස පුවත්පතෙහි විශේෂ ඉරිදා සංස්කරණය තුළ ප්‍රජා ගැටළු පිළිබඳ ලිපි නිතර පළ කරයි. ඇන්ඩ්‍රෑ, සුළු ජන කණ්ඩායමක් වූ මුනා ප්‍රජාවේ වාර්ෂික ආගමික උත්සවය විවේචනය කරමින්, සහ මුනාවරු ශිෂ්ට සම්පන්න නොවූ ජන කණ්ඩායමක් ලෙස නිරූපණය කරමින් ලිපියක් පළ කළේය. මුනා ප්‍රජාවේ උගත් කණ්ඩායමක් කියා සිටියේ ඔවුන්ගේ ප්‍රජාවට අපකීර්තියක් ඇති කළ හැකි සහ අනාගතයේදී වාර්ගික කැරලි ඉපදවීමට හැකි යැයි ඔවුන්ට සැක ඇති කරවන ඇතැම් වැරදි සහ ව්‍යාජ තොරතුරු ලිපියේ අන්තර්ගත බවයි. එමනිසා, ඔවුන් කියා සිටියේ ප්‍රධාන සංස්කාරක විසින් ICCPR පනතේ ප්‍රතිපාදන උල්ලංඝනය කර ඇති බවයි.

ප්‍රධාන සංස්කාරක, චෝදනා ප්‍රතික්ෂේප කරන අතර තදින්ම කියා සිටියේ ඔහුගේ චේතනාව, කිසිම සුලු ජන කණ්ඩායමකට එරෙහිව ප්‍රචණ්ඩත්වය ඇවිස්සීම නොවන බවත් එම කණ්ඩායමේ සම්ප්‍රදායන් පහදාදීම වන බවත්ය. ඔහු තවදුරටත් තර්ක කළේ ඔහු ක්‍රියා කර ඇත්තේ සින්දර් ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ අවධාරණය කර ඇති භාෂණයේ සහ ප්‍රකාශනයේ අයිතිවාසිකම මත පදනම් වූ හුදෙක්ම ආචාරධර්මී ආකාරයකට බවයි.

සින්දර්හි නීති පද්ධතිය, ශ්‍රී ලංකාවේ නීති පද්ධතියට සමාන බව සහ ඔබ මෙම නඩුව විමසන විනිශ්චයකාරවරයා බව උපකල්පනය කරමින් නඩු තීන්දුව ලියන්න. ඔබගේ නඩු තීන්දුව තුළ උක්ත කරුණුවලට අදාළ ව්‍යවස්ථාව අර්ථ නිරූපණයේදී ඔබ යොදා ගන්නා ව්‍යවස්ථා අර්ථ නිරූපණ රීති ඉස්මතු කළ යුතුය. ඔබගේ පිළිතුර අදාළ අධිකාරීන් ඇසුරින් සනාථ කළ යුතුය.

4. "පොදු නීති විනිශ්චයකාරවරු නඩුවෙන් නඩුවට ඉදිරියට යන්නේ, පැරණි මධ්‍යධරණී නැවියන් ලක්ෂ්‍යයෙන් ලක්ෂ්‍යයට වෙරළ වැළඳගනිමින් සහ විවෘත මුහුදේ අන්තරායන් මඟ හරින ලෙසිනි."

   උක්ත ප්‍රකාශය අනුසාරයෙන්, ශ්‍රී ලංකාව තුළ අධිකරණ පූර්ව නිදර්ශන න්‍යාය යෙදීම, එහි පූර්ව අවශ්‍යතා සහ සීමාවන් මතු කර දක්වමින් සාකච්ඡා කරන්න.

5. තාබ්‍රාහි ආදිවාසී ප්‍රජාවක් වන කීලු, කොවිඩ්-19 (COVID-19) සුව කිරීම සඳහා පැණියක් හඳුන්වා දුන් අතර එම පැණිය සාම්ප්‍රදායික ඖෂධයක් ලෙස ලියාපදිංචි කිරීමට බලාපොරොත්තු වේ. ලියාපදිංචි ක්‍රියාවලිය අතරතුරදී, බලධාරීන් පැණිය ලියාපදිංචි කිරීම, 2005 අංක 16 දරණ විෂ පැළෑටි පනතේ ප්‍රතිපාදන අනුව කිසිම හේතුවක් මත වගා කිරීම තහනම් කරන ලද මුකරි පැළෑටියේ කොළ එහි අන්තර්ගතවීම නිසා ප්‍රතික්ෂේප කරන ලදි.

   කීලු ප්‍රජාව, මුකරි කොළ, පැණියේ ඇතුළත් වැදගත් ද්‍රව්‍යයක් ලෙස භාවිත කර ඇති බව, පුස්කොළ පොත්වල නිර්දේශ කර ඇති ආකාරය අනුව සාධාරණීකරණය කළේය. ප්‍රජාවේ වයස්ගතම පුද්ගලයා කියා සිටියේ ඔවුන් මෙම පැණිය පරම්පරා ගණනාවක් පුරාවට වෛරස සහ සංක්‍රමණීය රෝග නිවාරණයට භාවිත කරන බවත්, සහ ඔවුන්ගේ මුතුන්මිත්තන් මුකරි පැළෑටිය වසර සිය ගණනාවක් පුරාවට පැණිය නිෂ්පාදනය සඳහා වගා කරන බවත්ය. මුකරි පැළෑටිය වගා කිරීම සඳහා ඔවුන්ගේ ගම ආසන්නයේ වෙනම ඉඩමක් වසර ගණනාවක් පුරා කිසිඳු බාධාවකින් තොරව භාවිත කරන බව කීලු ප්‍රජාවේ තවත් පුද්ගලයෙක් කියා සිටියේය. රටේ චාරිත්‍රානුකූල නීතිය අනුව ඔවුන්ට මුකරි පැළෑටිය වගා කිරීමට අයිතිවාසිකමක් ඇති බවත්, සහ ඔවුන්ට ඔවුන්ගේ ඖෂධය කිසිඳු නෛතික අවහිරයකින් තොරව ලියාපදිංචි කළ හැකි බවත් කීලු ප්‍රජාවේ සාමාජිකයෝ තර්ක කළහ.

රාජ්‍ය අධිකාරියේ නීති නිලධාරියා ලෙස, පැණිය ලියාපදිංචි කිරීම සඳහා ඔවුන්ගේ චාරිත්‍රානුකූල පරිචයේ වලංගුභාවය පිළිබඳ ඔබගේ උපදේශය බලාපොරොත්තු වේ. තාබ්‍රාහි නීති පද්ධතිය ශ්‍රී ලංකාවේ නීති පද්ධතියට සමාන යැයි උපකල්පනය කරමින් ඔබගේ උපදේශය ලියා දක්වන්න.

6. ශ්‍රී ලංකා තරුණ නීතිඥ සංගමය (YLASL) විසින් සංවිධානය කරන ලද වෙබ් සම්මන්ත්‍රණයේදී (webinar) "නව සාමාන්‍යකරණයේදී (New Normal) විකල්ප ආරවුල් නිරාකරණය - සමථකරණයේ සහ බේරුම්කරණයේ වැදගත්කම." යන මාතෘකාව යටතේ කතාවක් කිරීමට ඔබට ආරාධනා කර ඇතැයි උපකල්පනය කරන්න.

ආරවුල් නිරාකරණ මෙම ක්‍රමවේදයන් දෙකෙහි ප්‍රධාන ලක්ෂණ සහ කොවිඩ්-19 වසංගතයේ (Covid-19 pandemic) ප්‍රතිඵලයක් ලෙස 'නව සාමාන්‍යකරණයේදී' (new normal) ඒවායේ අදාළත්වය සහ යෙදීම පිළිබඳව ඔබගේ ඉදිරිපත් කිරීම කෙටුම්පත් කරන්න. ඔබගේ පිළිතුර අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ ප්‍රායෝගික උදාහරණ මඟින් සනාථ කළ යුතුය.

*******

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

# FACULTY OF LAW

## BACHELOR OF LAWS EXAMINATION, YEAR 1 (Online) -2020

## LEGAL METHOD

(Three Hours)

Total Number Questions: 06

Answer any **THREE** questions **only.**

(Candidates will be penalized for illegible handwriting.)

---

1. While many legal scholars agree with the proposition that the law is a directed tool for social change, they disagree on the definition of 'law'.

   Discuss, with reference to any two schools of legal thought and enrich your answer with practical insights.

2. Advocates of the Adversarial system believe that the competition between the plaintiffs and defendants is the best way to get to the truth. However, critics claim that, by competing to prove one's case to the judge, parties are encouraged to win, not uncover the truth.

   In light of the above statement, compare and contrast the strengths and weaknesses of the adversarial system of justice with those of the inquisitorial system.

3. Section 3 (1) of the International Covenant on Civil and Political Rights Act No 56 of 2007 (ICCPR Act) provides as follows:

   *No person shall propagate war or advocate national, racial or religious hatred that constitutes incitement to discrimination, hostility or violence.*

   Andrew is the chief editor in a leading government press of the State of Sandir, a multi-ethnic country. The press regularly publishes articles on community issues on its special Sunday edition to enlighten the public on various cultures and beliefs. Andrew published an article criticizing the annual religious ceremony of the Muna community, a minority group, and portraying Munas as an uncivilized group of people. A group of intellectuals belonging to the Muna community claimed that the article included several incorrect and unauthentic information, which they fear would bring disrepute to their

community and may provoke ethnic riots in the future. Therefore, they claimed that the chief editor has violated the provisions of the ICCPR Act.

The Chief editor denies the charges and contends that his intention is not to incite violence against any minority group, but to elucidate the traditions of the particular group. He further argues that he acted purely in an ethical manner, based on the right to speech and expression which emphasized in the Constitution of the Republic of Sandir.

Write a judgment assuming that the legal system of Sandir is similar to that of Sri Lanka and you are a judge hearing this case. Your judgment should highlight the rules of interpretation that you apply in interpreting the relevant statute to the above facts, and you should support your answer with relevant authorities.

4. "Common law judges proceed from case to case, like the ancient Mediterranean mariners, hugging the coast from point to point and avoiding the dangers of the open sea."

   In light of the above statement, discuss the application of the doctrine of judicial precedent in Sri Lanka, highlighting the prerequisites for its application and limitations.

5. Keelu, an indigenous community of Thabra, introduced a syrup to cure COVID-19 and seeks to register the said syrup as a traditional medicine. During the registration process, the authorities refused to register the syrup as it contains leaves of the *Mukari* plant, which is prohibited to cultivate under any circumstances according to the provisions of the Poisonous Plants Act, No. 16 of 2005.

   Keelu community justified that *Mukari* leaves are used as one of the significant ingredients in the syrup, as prescribed in the Ola-leaf manuscripts. The oldest man of the community claimed that they have been using this syrup for many generations to cure viruses and other communicable diseases, and that their ancestors have cultivated *Mukari* plants for many hundred years to prepare the syrup. Another member of Keelu community stated that they have been using a separate land near their village to cultivate *Mukari plants* for many years without any obstruction. Members of the Keelu community argue that they have a right to cultivate *Mukari* plants according to the customary law of the country and, that they can register their medicine without any legal impediment.

   As the legal officer of the government authority, your advice is sought as to the validity of their customary practice to register the syrup. Write your advice assuming the legal system of Thabra is similar to that of Sri Lanka.

6. Assume that you are invited to speak at a webinar organized by the Young Lawyers Association of Sri Lanka (YLASL) on the topic "Alternative Dispute Resolution in the New Normal – The Importance of Mediation and Arbitration."

   Draft your presentation with reference to the key characteristics of these two mechanisms of dispute resolution and their relevance and applicability in the 'new normal' resulting from the Covid-19 pandemic. Your answer should be supported by relevant statutory provisions and practical examples.

*******

கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் பரீட்சை ஆண்டு I (நிகழ்நிலை) – 2020

## சட்ட வழிமுறைமை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. சட்டமானது சமூக மாற்றத்திற்கான இயக்கக் கருவியொன்று என்ற நிலைப்பாட்டினை சட்ட அறிஞர்கள் பலர் ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை சட்டத்தினது வரைவிலக்கணத்துடன் அவர்கள் உடன்படவில்லை.

   ஏதேனும் இரண்டு சட்ட சிந்தனைப் பிரிவுகளுடன் (schools of legal thought) தொடர்புறுத்தி ஆராய்வதுடன் நடைமுறைத் தோற்றப்பாட்டுடன் உமது விடையை மேம்படுத்துக..

2. வழக்காளிகள் மற்றும் எதிராளிகளுக்கிடையிலான போட்டி உண்மையை பெறுவதற்கு சிறந்த வழியாகும் என எதிரிடைவாத முறைமையினை (adversarial system) ஆதரிப்பவர்கள் நம்புகின்றனர். எவ்வாறாயினும், ஒருவரின் வழக்கை நீதிபதியிடம் நிரூபிக்க போட்டியிடுவதன் மூலம், திறத்தவர்கள் வெற்றிபெற ஊக்குவிக்கப்படுகின்றனரே தவிர உண்மையை வெளிக்கொணரவில்லை என்று விமர்சகர்கள் கோருகின்றனர்.

   எதிரிடைவாத நீதி முறைமையின் (adversarial system of justice) பலங்கள் மற்றும் பலவீனங்களை விசாரிப்புசார் முறைமையுடன் (inquisitorial system) ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் மேலுள்ள கூற்றின் பின்னணியில் ஆராய்க.

3. 2007ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து (ICCPR) தொடர்பான சட்டத்தின் பிரிவு 3 (1) பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது:

   *''எந்தவொரு நபரும் பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கு தூண்டுகின்ற போர், தேசிய, இன, அல்லது மத வெறுப்பைத் தூண்டுகின்ற எந்தவொரு பிரச்சாரத்திலும் ஈடுபடுதலாகாது.''*

   பல்லின நாடானான சந்தார் என்ற அரசின் முன்னணி அரச அச்சகமொன்றில் ஆண்ட்ரு என்பவன் தலைமை பத்திராதிபராவான். பல்வேறு கலாசார மற்றும் நம்பிக்கைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு அவ் அச்சகம் அதனது ஞாயிற்றுக் கிழமை விசேட இதழில் சமுதாய விடயங்கள் தொடர்பில் கட்டுரைகளை தொடர்ச்சியாக பிரசுரித்து

வருகின்றது. சிறுபான்மைக் குழுவொன்றான ‘முனா’ என்ற சமூகத்தினது வருடாந்த சமயக் கிரியையை விமர்சித்து முனா சமூகத்தினரை நாகரீகமற்ற மக்கள் குழுவொன்றாக சித்தரித்து ஆண்ட்ரூ கட்டுரையொன்றை பிரசுரஞ்செய்தான். முனா சமூகத்தினைச் சேர்ந்த புத்திஜீவிகள் குழுவொன்று அச்கட்டுரையில் பல தவறான மற்றும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் உள்ளடங்கியுள்ளதாகவும் அவை தமது சமூகத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும்மென்றும் எதிர்காலத்தில் இனக் கலவரங்களை தூண்டக் கூடுமெனவும் அவர்கள் அஞ்சுகின்றனர். ஆகவே, பிரதம பதிப்பாசிரியர் ICCPR சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளதாக அவர்கள் கோரியுள்ளனர்.

இச்சாட்டுதல்களை பிரதம பதிப்பாசிரியர் மறுப்பதோடு எந்தவொரு சிறுபான்மைக் குழுவினருக்கும் எதிராக வன்முறையைத் தூண்டும்நோக்கத்திலன்றி, குறிப்பிட்ட குழுவினரின் வழக்காறுகளைத் தெளிவுபடுத்துவதே தனது நோக்கமெனவும் வாதிடுகின்றான். சந்தார் குடியரசின் அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்ட பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் நெறிமுறையொன்றில் மாத்திரமே செயற்பட்டுள்ளதாகவும் அவன் மேலும் வாதிடுகிறான்.

சந்தாரின் சட்டமுறைமையானது இலங்கையைப் போன்றதெனவும் நீர் இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதியாக கருதி உமது தீர்ப்பை வரைக. மேற்கூறப்பட்ட நிகழ்வுகளுக்கு பொருத்தமான நியதிச்சட்டத்தினை பொருள்கோடல் செய்வதற்கு பிரயோகிக்கக் கூடிய பொருள்கோடல் விதிகளின் பின்னணியில் உமது தீர்ப்பானது அமைந்திருக்க வேண்டும் என்பதோடு உமது விடையானது பொருத்தமான அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்தப்படவும் வேண்டும்.

4. “பழங்கால மத்தியதரைக் கடற்படையினர் திறந்த கடலில் ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக கடலோரத்தின் ஒவ்வொரு புள்ளியையும் தழுவிச்செல்வது போன்று பொதுச் சட்ட நீதிபதிகள் ஒவ்வொரு வழக்கினையும் தொடர்கின்றனர்.”

   மேற்கூறப்பட்ட கூற்றின் பின்னணியில், இலங்கையின் முற்றீர்ப்புக் கோட்பாட்டின் (doctrine of judicial precedent) ஏற்புடைமை மற்றும் மட்டுப்பாடுகளுடன் தொடர்பான முன்நிபந்தனைகளை சுட்டிக்காட்டி அதன் பிரயோகந் தொடர்பாக ஆராய்க.

5. தாப்ரா என்ற நாட்டின் பழங்குடி சமூகமொன்றான ‘கீமூ’ என்பது COVID-19 இனை குணப்படுத்த சாறொன்றை (syrup) அறிமுகப்படுத்தியதோடு, அச்சாறினை பாரம்பரிய மருந்தொன்றாக பதிவு செய்ய அவர்கள் முற்படுகின்றனர். பதிவுச் செய்யும் செயற்பாட்டின் போது, 2005 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க நச்சுத் தாவரங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எந்தவொரு சூழலிலும் பயிரிடத் தடை விதிக்கப்பட்டுள்ள முகாரி தாவரத்தின் இலைகளை அச்சாறு உள்ளடக்கியதால் அதனை பதிவு செய்ய அதிகாரிகள் மறுத்தனர்.

   ஓலா - இலை கையெழுத்து சுவடிகளில் விபரிக்கப்பட்டமைக்கமைய இந்த பாரம்பரிய சாற்றில் முகாரி இலைகள் முக்கிய மூலப் பொருட்களில்லொன்றாக பயன்படுத்தப்பட்டது என்று கீமூ சமூகம் அதனை நியாயப்படுத்தியது. வைரஸ் மற்றும் பிற தொற்று நோய்களைக் குணப்படுத்த தமது சமூகம் பல தலைமுறைகளாக இந்தச் சாற்றினைப் பயன்படுத்தி வருவதாகவும் அவர்களின் மூதாதையர்கள் இச்சாற்றினை தயாரிப்பதற்காக

பன்னூறாண்டுகளாக முகாரி செடிகளைப் பயிரிட்டு வந்திருக்கின்றார்கள் என்பதாகவும் அச்சமூகத்தின் வயதான நபரொருவர் கோருகின்றான். தமது கிராமத்திற்கு அருகில் புறம்பான நிலமொன்றினைப் பயன்படுத்தி எந்தவிதமான தடைகளும்மின்றி பல ஆண்டுகளாக முகாரிச் செடிகளை பயிரிட்டு வந்ததாகக் கீழு சமூகத்தைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் தெரிவித்தார்.

நாட்டின் வழக்காற்றுச் சட்டதின் அடிப்படையில் முகாரிச் செடிகளை பயிருடுவதற்கு தங்களுக்கு உரிமை இருப்பதாகவும் எந்தவொரு சட்டத் தடையும்மின்றி அவர்கள் மருந்தினை பதிவு செய்யலாம் எனவும் கீழு சமூகத்தின் உறுப்பினர்கள் வாதிடுகின்றனர்.

இச்சாற்றினைப் பதிவு செய்வது தொடர்பில் அவர்களின் வழக்காற்று நடவடிமுறைகளின் வலிதாந்தன்மை குறித்து அரசாங்க அதிகாரத்தின் சட்ட அதிகாரியாக உமது சட்ட ஆலோசனையைப் பெற நாடுகிறது. தாப்ராவின் சட்ட முறைமையானது இலங்கையைப் போன்றதெனக் கருதி உமது ஆலோசனையை எழுதுக..

6. இலங்கையின் இளம் வழக்கறிஞர் மன்றத்தினால் (YLASL) ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இணைய அரங்கு (Webinar) ஒன்றில் “ புதிய நிலைமையில் பிணக்குத் தீர்வுக்கான மாற்றுவழி (alternative dispute resolution) – மத்தியஸ்த்தம் மற்றும் நடுத்தீர்ப்பின் முக்கியத்துவம்.” ஏன்ற தலைப்பின் கீழ் உரை நிகழ்த்துவதற்கு நீர் அழைக்கப்பட்டுள்ளீர் என்று கருதிக்கொள்க.

இவ்விரண்டு பிணக்குத்தீர்வு பொறிமுறைகளின் முக்கிய பண்பியல்புகளையும் COVID-19 தொற்றுநோயால் விளைந்த ‘புதிய நிலைமையில்’ அவற்றின் பொருத்தம் மற்றும் ஏற்புடைமை தொடர்பில் உமது சமர்ப்பணத்தினை வடிவமைக்க. உமது விடையானது தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை எடுத்துக் காட்டுக்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

*******